2010 மே 13] [டாக்டர் க. பொன்முடி]

அவர்களோடு கலந்து பேசி, நாளை தேர்வு முடிவுகள் வந்த பிறகு, ஒரு வாரத்திற்குள்ளாக அதற்கான முடிவுகளை அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

(இ) மூடப்பட்ட மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலைத் தொழிலாளர்களுக்குப் பணப் பயன் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் பிறந்து தன்னுடைய அயராத உழைப்பால், ஈடு இணையற்ற சேவையால் பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, இதுவரையில் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகி, அரசியல் பண்பாட்டைக் காத்து, நாகரிகத்தை மேலோங்கச் செய்து எல்லா நிலைகளிலும் எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பணி தொடர, தமிழ்நாட்டு மக்களுக்கு, மொழி, இனம் காத்து, இந்த மண் செழிக்க, அவர்கள் நீண்ட நாள் வாழ பா.ம.க. சார்பில் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதே நேரத்தில், நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்து நீண்ட நாட்களாகின்ற பிரச்சினை, மேட்டூரில் பிரசித்தி பெற்ற Mettur Textile Mills *என்ற மில் மூடப்பட்டு, அந்த மில் திறக்கப்படாததால் 3,000 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இந்த மில் திறக்கப்படவில்லை என்ற சூழ்நிலை இருந்தாலும்கூட, அதில் பணியாற்றிய தொழிலாளர்களில் சிலர் இறந்துவிட்டார்கள், சிலர் ஊரைக் காலி செய்து வெளியூருக்குச் சென்ற நிலையில் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

அதைப்போல, ராஜபாளையம், சத்திரப்பட்டி போன்ற ஊர்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஒன்றுதான் கேட்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒன்றுதான்

கேட்கலாம். (குறுக்கீடு) நீங்கள் ஒரு issue–வைச் சொல்லி விட்டீர்களென்றால், அவ்வளவுதான். முடிந்துவிட்டது, உட்காருங்கள். அடுத்து, செல்வி பாலபாரதி, சொல்லுங்கள்.

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்—தொடர்ச்சி

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு issue மட்டும்தான்.

செல்வி கே. பாலபாரதி: ஒன்றுதான் என்றால், ஏற்கெனவே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. அப்படியென்றால், உட்காருங்கள். (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: இல்லை, இல்லை. அதிலே மாற்றுக் கருத்து இருக்கிறது. ஏனென்றால், எல்லோருமே பொறியியல் கல்விக்காகப் போய்விட்டால், தமிழகத்தில் வரலாறு, அறிவியல், வணிகவியல், பொருளாதாரம் போன்றவற்றிற்கு மாணவர்கள் சேர்க்கை என்பது குறைந்து கொண்டேயிருக்கிறது. ஒரு பாடப் பிரிவிற்கு மட்டும் இவ்வாறு பரிசீலிப்பது என்பது பொருத்தமாக இருக்காது. எல்லாப் பாடப் பிரிவுகளுக்கும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய முறை தொடர்வது என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

(ஈ) ராஜபாளையம், சத்திரப்பட்டி, மருத்துவத்திற்குப் பயன்படும் துணி நெய்யும் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

***செல்வி கே. பாலபாரதி:** விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், சத்திரப்பட்டியில் 10,000–க்கும் மேற்பட்ட தொழிலாளிகள், காயத் துணி உட்பட, மருத்துவத்திற்குப் பயன்படுத்தக்கூடிய துணிகளை நெய்யக்கூடிய தொழிலாளிகள் காலவரையற்ற வேலைநிறுத்தம்